# அனலை

திரைகடலோரத் தீவின் குரல்

**The Analai**

அணை: 01 - ஒக்ரோபர் 2011 - அலை: 01





1985ம் ஆண்டில் வெளியிடப்பட்ட அனலை கையெழுத்துச் சஞ்சிகையின் முன்பக்கம்

அறிவிலுயர் சமுதாயத்தை ஆக்கிட அயராது செயற்படும் நோக்குடன் ஒரு சஞ்சிகை

உ

கணபதி துணை

திருவருட் தமிழ் தேர் யாழகத்தே
திகழுமனலைக் கணபதி நாதன்
கருதுமுறை யுட்பொ ருட் கனிவிளக்கும்
கற்பகமாய் பொருந்தி வரு
மருப்புறு கரி முகத் தைக்கொண்டே
மருவுமொரு பெரிய புலத்தே
விருப்புற வந்த மர்வாரி வள்ளல்
வியந்தவர் பதமே போற்றி

# அலை ஓசை

ஒரு பிரதேசத்தின் அபிவிருத்தியை அளப்பதற்கு கல்வி மேம்பாடும் உள்கட்டுமான, கட்டமைப்புகளின் மேம்பாடும் அம்மக்களின் கலை கலாசார மேம்பாடுகளும் கவனத்திற் கொள்ளப்படுகின்றன. அனலைதீவு, யாழ்ப்பாண நகரத்திலிருந்து மேற்குத் திசையில் 30கி.மீ தூரத்தில் இருந்தாலும், பிரதான நிலப்பரப் பிலிருந்து கடலால் பிரிக்கப்பட்டுள்ள காரணத்தால் இதுவரை காலமும் பல்வேறு சிரமங்களைத் தாங்கியே அபிவிருத்திப் பாதையில் தளிர்நடை போட்டுவருகின்றது. இக் கிராம மக்கள் சமூகத்தை வலுவூட்டி, பிரதேச அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்கான நிறுவனக்கட்ட மைப்பான ஊர்காவற்றுறை பிரதேச சபைக்கு, மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள அங்கத்தவர்களைக் கொண்ட சபை பதவியேற்றுள்ள நிலையில், மக்களுடன் மிக அண்மித்து இயங்கக்கூடிய நிலை உள்ளூராட்சி தேர்தல் மூலம் மேலும் அதிகரித்துள்ளது.

இலங்கையில் பொதுநூலகங்கள் உள்ளூராட்சி சபைகளின் மூலமாக, மக்களின் தகவல் தேடல், அறிவு வளர்ச்சி, பொழுது போக்கு வாய்ப்பளித்தல் போன்ற நன்மைகளை அடைந்து கொள்ளும் பொருட்டு நடாத்தப் படுகின்றன. கல்வி வளர்ச்சிக்கு கல்வி நிறுவனங்களைப் போலவே பொது நூலகங்களும் பெரும் பங்களிப்பை நல்கி வருகின்றன. மாணவர்கள் மட்டுமன்றி சமூகத்தின் அனைத்துப் பிரிவினரின் சேவைகளையும் பொது நூலகங்கள் ஆற்றுகின்றன. தகவல் பரிமாற்றத்துக்கு, அறிவுத் தேவைகளுக்கு எதுவித கட்டுப்பாடு மின்றி நூலகங்கள் தமது வளங்கள் மூலம் பெரும் பங்காற்றுகின்றன.

இன்றைய கல்வி முறைக்கு உதவியாக தகவல் நிலையங்களிலே இலத்திரனியல் சாதனங்களின் பாவனையூடாகத் தகவல் வழங்கும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அனலைதீவு போன்ற தொலைதூரக் கிராமங்களும் நகரங்களுக்குச் சமமான விருத்தி காண அறிவுத் தளத்திலே பல்வேறு ஆக்கப்பணிகள் காத்திருக்கின்றன.

இவை சம்பந்தமான திறந்த, விவாதங்கள், கருத்தாடல்கள், அனுபவப் பகிர்வுகள், பயிற்சிகள் சகலருக்கும் கிடைக்கத் தக்க களமாக இந்நூலக சேவைகள் விரிவாக்கம் பெறல் வேண்டும்.

அனலைதீவுப் பொதுசன நூலகத்தின் 32 ஆண்டுகாலச் சேவை நிறைவிலே நமது நல்ல சிந்தனைகளையும் கருத்தோட்டங் களையும் ஏனையவர்களுடன் பகிர்ந்து கொள்ளவும், சிறந்த அறிஞர்களின் சிந்தனை வெளிப்பாடுகளைக் கொண்டிருக்கும் நூலகத்தின் தேட்டங்களையிட்டு இளஞ் சமுதாயத்தினர் தெரிந்து கொள்ளவும் அவர்தம் இலக்கிய ஆற்றல்களை அலை கடலுக்கு அப்பாலும் எடுத்துச் செல்லவும் உள்ளூராட்சி சபையின் உன்னத பணிகளுக்கு மக்களின் ஆதரவு வலுச் சேர்க்கவும் உதவுமுகமாக 'அனலை' சஞ்சிகை அனலைதீவு பொது நூலக வாசகர் வட்டத்தின் வெளியீடாக வெளிவருகின்றது.

1986ம் ஆண்டுகளில் 20 இதழ்கள் வரை கையெழுத்துச் சஞ்சிகையாக உலவிய 'அனலை' பெண்ணாள் இருபத்திஐந்து ஆண்டுகளின் பின் அச்சுப்பிரதியாகி உங்கள் முன் நிற்கின்றாள்.

**அன்பு வாசகர்களே!**

அனலையின் எதிர்காலச் சிற்பிகளை உருவாக்கும் பயிற்சிக் களமாக அமையும் இச் சஞ்சிகையைப் பயன்படுத்துவதும் வளர்த்து விடுவதும் உங்கள் கைகளில்தான் உள்ளது.

**புத்தகங்கள், சஞ்சிகைகள் படிப்பதன் முக்கிய நோக்கம் அறிவை வளர்த்துக் கொள்வது மட்டுமல்ல, வளர்த்துக்கொண்ட அறிவை உரிய வேளையில் பயன்படுத்திக் கொள்வதுமாகும். - ஹேர்பேர்ட் ஸ்பென்சர்**

ஊர்காவற்றுறை பிரதேச சபை



## கௌரவ தவிசாளர் திரு. மருதையினார் ஜெயகாந்தன் அவர்களின் வாழ்த்துச் செய்தி

'அனலை' என்னும் இச் சஞ்சிகையானது இப் பிரதேச சபைக்குட்பட்ட அனலைதீவை மையமாகக் கொண்டு வெளிவருவது பெருமைக்குரிய விடயமாகும். 1985 - 1986 காலப்பகுதியில் கையெழுத்துச் சஞ்சிகையாக வெளியிடப்பட்டு, கிராம மக்களிடையே பல்வேறு தகவல்களை வழங்கியும் மாணவர்களிடையே எழுத்தாற்றல், வாசிப்புப்பழக்கம் போன்றவற்றை ஊக்கியும் வந்தமை கவனத்திற் கொள்ளவேண்டிய விடயமாகும். இச் சஞ்சிகையை தேசிய வாசிப்பு மாதச் செயற்பாடாக மீண்டும் மக்கள், மாணவர்கள் மத்தியில் அச்சுவடிவில் கொண்டுவர முயற்சி எடுத்துள்ள அனலைதீவு பொதுநூலக நூலகர் மற்றும் நூலக ஆலோசனைக்குழு, வாசகர்வட்டம் உறுப்பினர்களுக்கு என்னுடைய பாராட்டுக்கள். இச் சஞ்சிகையானது இனி வருங்காலங்களில் எவ்வித தடைகளுமின்றி வெளிவருவதற்கும் அனைவருக்கும் பயன்படும் விதமாகப் பணியாற்றுவதற்கும் மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**ம. ஜெயகாந்தன்**
தவிசாளர், ஊர்காவற்றுறை பிரதேசசபை

---


## ஊர்காவற்றுறை பிரதேச சபைச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

சமூகத்திற்கும் உள்ளூராட்சி சபைக்கும் இடையே புரிந்துணர்வை வளர்க்கவும், சபையினுடைய செயற்பாடுகளில் மக்களின் பங்கேற்பை ஒன்றிணைக்கவும், பொதுநூலகமொன்று தான் இயங்கும் பிரதேசத்தின் அனைத்து மக்களுடனும் தொடர்புகளைப் பேணவும், பிரதேசத்தினதும் சபையினதும், நூலகத்தினதும் செயற்பாடுகளை ஆவணப்படுத்தவும், இவ் 'அனலை' சஞ்சிகை காத்திரமான பங்களிப்பை வழங்க முடியும்.

அனலைதீவு பல்வேறு வளங்களையும் திறன்களையும் கொண்ட கிராமமாகும். இவ்வூரின் வரலாற்றை, இலக்கிய வெளிப்பாடுகளை, மாணவர்களின் திறமைகளை யாவரும் அறிய இச் சஞ்சிகை களமமைக்கிறது. இப்பணியில் ஈடுபடும் அனலைதீவு நூலக சமூகத்துக்கு எனது பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் உரித்தாகுக.

**சு. சுதர்சன்**
செயலாளர்

ஆளுமை மிக்க மனித சமூகத்தின் பலம் புத்தகங்களும் வாசிப்புமே



## அனலைதீவு சதாசிவ வித்தியாலய முன்னாள் அதிபரும் கல்வியியலாளரும் அனலைதீவு பொதுநூலக ஆலோசனைக்குழு, வாசகர்வட்டக் காப்பாளருமான
## உயர்திரு சி. காராளபிள்ளை B.A அவர்களின் ஆசிச் செய்தி

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் அனலையம்பதியில் "அனலை" என்னும் சஞ்சிகை வெளிவருவது கண்டு நான் மிகமிக மகிழ்ச்சியடைகின்றேன். அனலையூரின் வரலாற்றையும் அவ்வப்போது இங்கு இடம்பெறும் முக்கிய நிகழ்வுகளையும் பற்றி வெளிக்கொணர்வது பாராட்டுக்குரிய ஒன்றாகும். இச் சஞ்சிகையின் கர்த்தாவாக விளங்கும் திரு. க. சௌந்தரராஜன் ஐயர் அவர்களை இளமைப்பருவத்திலேயே நான் அறிவேன். பரந்த நோக்கம், வலிந்த மனப்பான்மை, தன்னலமற்ற தியாகசிந்தை, எல்லோர்க்கும் நல்லதையே செய்ய வேண்டும் என்ற மேலோங்கிய சமூகசிந்தனை எல்லாவற்றிற்கும் சொந்தக்காரர். அவர் இவ்வூரிலிருந்து மக்கள் புலம் பெயர்ந்த காலத்தில் ஊரின் கட்டுமானங்கள் அனைத்தையும் கட்டிக்காப்பாற்றிய பெருமை அவருக்குண்டு. அவர் மூலமாக வெளிவரும் இச் சஞ்சிகை ஊருக்கு நன்மை பயக்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**சி. காராளபிள்ளை**

### யா/ அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலய அதிபரின் ஆசி
### அனலைக்கோர் ஆசி

அனலையில் கல்விப் பணியாற்றும்
ஆண்டுகள் பலப்பல அனுபவங்கள்
அன்பில்; பண்பில்: ஆதரிக்கும்
அறிஞர் நிறைந்த இவ்வூரில்;
முன்னோர் ஆற்றிய நற்பணிகள்
தன்னேரில்லா தகைசான்றாய்
என்னே! என்றே இறும்பூதி
ஏற்றம் பெற்றிட இலங்கிடுவாய்


நீரால் சூழ்ந்த அனலையிலே
நிலமும் நீரும் நன்றாமே;
பேரால் ஊரால் இனங்கண்டு
பெருமை பெற்றவர் பலருண்டு
வேரால் விழுதால் தழைத்தோங்கி
வையம் வளம்பெற வாழ்வார்போல்
சீராம் சிறப்பாம் செயலாற்றல்
சிந்தை வளர்ந்திடச் செய்வாயே

**வீ. ஓங்காரலிங்கம்**

### வாழ்த்துச் செய்தி

"அனலை" எனும் சஞ்சிகை முத்தமிழையும் தன்னகத்தே கொண்டமைந்து சிந்தனையைத் தூண்டித் துளிர் விட்ட நிலைகளமாக அமைந்தது. 1985ம் ஆண்டளவில் வெளிவந்து நீண்ட கால இடைவெளியின் பின் மீண்டும் சுடர் விட்டு அறிவு, திறன், மனப்பாங்கைப் பிரயோகப்படுத்தி என்றும் ஒளிபரப்பி நிற்கவும் எம் இளைய தலைமுறையினருக்கு வழிகாட்டியாக நிலைத்திருந்து புகழ் பரப்பிட தொடர்ந்து "அனலை" வெளிவர வேண்டும் என வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

**திருமதி. ஜெ. சிவபாலன்**
ஆசிரியர்
யா/அனலைதீவு சதா சிவ மகா வித்தியாவயம்,



### அனலைதீவு தெற்கு அ.த.க. வித்தியாலய அதிபர்

## செல்வி. ச. விக்னேஸ்வரி அவர்களின் வாழ்த்து

2011ம் ஆண்டு தேசிய வாசிப்பு மாதத்தைச் சிறப்பிக்கும் வண்ணம் அனலைதீவு பொதுநூலகத்தால் "அனலை" என்னும் சஞ்சிகை மீண்டும் வெளியிடப்படவுள்ளது அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். மாணவர்களின் ஆக்கங்களைத் தாங்கி, காலாண்டு ரீதியில் வெளியிடப்படும் 'அனலை', மாணவர்களின் எழுத்தாக்கங்களைத் தாங்கி வாசிப்பு ஆர்வத்தைத் தூண்ட வல்லதாக விளங்கவேண்டுமென விரும்புகின்றேன். அகவை பல கண்டு விழுதுகள் பல விட்டு வளமுடன் நின்று அனலைதீவுச் சமூகத்தின் கல்வி ஒளி பரப்ப என் இதய நல்வாழ்த்துக்கள்

ச. விக்னேஸ்வரி

---

### அனலைதீவு வடலூர் அ.த.க. வித்தியாலய அதிபர்

## திருமதி. கௌ. கேதீஸ்வரநாதன் அவர்களின் வாழ்த்து

பாடசாலை சென்று கற்கவேண்டி, சிணுங்கி சிணுங்கி புத்தகப்பையுடன் ஊர்ந்து வரும் சின்னஞ்சிறார்கள் கூட நூலகத்துப் புத்தகங்களைக் கண்டதும் ஆசையுடன் எடுத்துப்படிக்க விழைவதைக் காண்கின்றேன். வாசிக்கப் பழகுவதற்கு சிறுவர்களுக்கேற்ற வகையில் புத்தகங்கள், பிரசுரங்கள், சாதனங்கள், கதைகூறல் நிகழ்வுகள், ஆடல்பாடல் நிகழ்வுகள் உதவ வல்லன. சிறார்களின் செழிப்பான எதிர்காலத்துக்கு அனலைதீவு நூலகமும் அனலை சஞ்சிகையும் நன்நோக்கோடு செயற்பட என் இதயத்து வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

திருமதி. கௌ. கேதீஸ்வரநாதன்
(அதிபர்)

---

கவிதை

## வாசிப்பு



வை. ரோகினி

வாசிப்பு இல்லா மனிதனின் சிந்திப்பு
பூசிப்பு இல்லாத் தெய்வம் போன்றது
மனிதனை மனிதனாய் மிளிரச் செய்வதும்
மாண்புறு ஆக்கங்களை எழுதத் தூண்டுவதும்
கண்டதைக் கற்றுப் பண்டிதராவதும்
எள்துணை நேரமும் வாசிப்பின் மூலமே
ஆன்று அவிந்து அடங்கிய சான்றோர்
போந்து பொலிந்து ஆற்றிய உரைகளை
ஊன்றி ஊன்றி வாசிப்பது தான்
உயர்ந்த சமூகம் உருவாக வழியாம்
சொல்லின் செல்வர் அறிஞர் அண்ணா எழுதியதை
சோம்பல் இன்றி தம்பிகள் வாசித்ததால்
மூட நம்பிக்கையில் மூழ்கிக்கிடந்த தொரு நாட்டை
அறிவியல் சிகரமாய் ஆக்க முடிந்தது.
தூங்காதே தம்பி தூங்காதே சோம்பேறி என்ற பேர்
வாங்காதே

நல்ல கருத்துக்களை ஊன்றிப் படிப்பதால்
நாடு முன்னேற நீ வழி சமைப்பாய்
புரட்சிக் கலைஞர் போதித்த கருத்துக்கள்
நாடு தழுவிய நல்லாட்சிக்கு வழி வகுக்கும்
இளமையில் கல்வி சிலையில் எழுத்துப் போல்
வாசிப்புப் பழக்கமும் வழக்கத்திற்கு வர வேண்டும்
சிறுவர் உள்ளத்தில் சிறந்த கருத்துக்கள்
இளமையில் தோன்றுவது வாசிப்பின் மூலமே
ஒற்றுமை ஓங்க: மனிதப் பண்பு வளர்ந்திட:
நற்பிரசைகள் ஆகிட இளமையிலிருந்தே
வாசிப்புப் பழக்கம் உருவாகிட வேண்டும்



நல்ல நூலைப்போல் தகுந்த நண்பனும் உறவினனும் இவ்வுலகில் எனக்கில்லை - கவிஞர் டியூப்பர்

# கிராமத்து ஓவியங்கள்

அனலை ஆறு. இராசேந்திரம்

எங்கள் கிராமம் எழிலோடு தெரிகிறது!
தெங்கு பனையும் வாழைபலா தேமாவும்
நுங்கும் இளநீரும் முக்கனியும் தீந்தமிழ்போல்
தந்தே எமைவளர்த்த தாய்மண் தெரிகிறது!
பத்தாயிரம் கற்கள் தூரத்தே நானிருந்து
முத்தாய்க் கடல்நடுவண் விளங்கும் எமதூரை
நெஞ்சில் நிறுத்தி நினைவெடுத்துப் பார்க்கின்றேன்.
பிஞ்சு வயதிலிருந்து பிறப்போடு வளர்ப்புண்ட
எங்கள் கிராமம் எழிலோடு தெரிகிறது!
காற்றி னசைவைக் காரிகையர் போற்றருக்கள்
ஏற்று நடம்புரியும் எம்பூமி தெரிகிறது!
அல்லிக் குளமும் அதனருகே ஆலயமும்
முல்லை மலர்க்காடும் முற்றித் தலைகவிழ்ந்த
செந்நெல் வயல்வெளியும் செம்மாலைப் போதுகளும்
அம்மம்ம! நெஞ்சத்து வீணை நரம்புகளை
மீட்டி இசைபொழிய நினைவு தொடர்கிறது!
காலைக் கதிர்விரியக் கமலம் முகைநெகிழ
ஆலயத்துப்பூசை மணி குலுங்கி ஆர்ப்பரிக்க
காற்றசைய மெல்லச் சலசலத்து நெல்லசைய
நாற்று நடும் பெண்கள் நடவுப்பா பாடிவர
உச்சிப்பொழுதுவரும் உழைப்பாளர் எல்லோரும்
பச்சை மரநிழல்கள் தேடிக் குளக்கரைக்கு
வந்து பசியாறி வம்பளக்கும் சிலநேரம்
சிந்தை எழுந்து சிறப்பாய்த் தெரிகிறது!
மாலைப் பொழுதுவரும் மகிழ்வோடு மனம்ஓடும்
மேலைக் கடற்கரையில் விந்தை பலதெரியும்
கொட்டிக் குழைத்த குங்குமத்திற் றோய்த்தாற்போல்
வட்ட நிலவு கீழ்வானிற் காட்சிதரும்
செங்குருதி ஆறாய்ச் செருக்களத்தில் ஓடுதல்போல்
எங்கும் சிவப்புநிறம் அங்கே பொலிந்திருக்கும்
கன்னங் கருதிட்டுச் சிலகூடி அருகருகே
சின்னமலைகள்போல் ஒரு தோற்றம் அவையூடே
பொன்னிறத்தில் ஓராறு பாய்ந்து பொலி செய்யும்
நித்தம் பயிர்விளைக்க நினைத்த உழவர்கள்
கொத்திப் பதமிட்டாற் போன்று வான்தெரியும்
நீலமணி என்னத் திகழும் கடல்நீரில்
கோலப் பரிதிக் கதிர்தெறித்து மேற்சிந்தும்
அன்னப் பறவை அசைந்துநடை போட்டதென
பொன்னிறத்து நீரூடு சிறுபடகு முன்செல்லும்
நெஞ்சத்திற் றாய்மை நினைவுவர வாயினிலே
குஞ்சுகளுக் கிரைகொண்டு புட்குலங்கள் பறந்தோடும்
கீக்கீ எனக்கிளிகள் கூவிப் பனம்பொந்தை
நோக்கிப் பறந்துசெலும் நீலக் கருங்குயில்கள்
மாமரத்துக் கிளைதோறும் மனம்திறந்து வாய்திறந்து
தேமதுரத் தீம்பாடல் இனிதாய் இசைத்திருக்கும்
மடியிற்சுரந்த பால்நிறைந்து நோவு செய
கடிதில் மனைகொண்டு கன்றுகளுக் காவூட்டும்
கள்ளி ஒருபுறமும் கால்வைக்க இடமின்றி
முள்ளி மறுபுறமும் சிறுகாட்டிற் படர்ந்திருக்கும்
வெள்ளை இளநீலம் கத்தரிப்பூ வண்ணத்தில்
கொள்ளை மலர்த்திரளாய் எருக்கலைகள் பூத்திருக்கும்
கொன்றை மரமெங்கும் குலைகுலையாய் மஞ்சட்பூ
அற்றை விழவுக்காய் அலங்கரித்தாற் போற்றோன்றும்
சுற்றி நறும்வாசம் சுகம்செய்யக் கான்முல்லை
பூஆடை கொண்டு புதுமேனி மூடிநிற்கும்
காரைச் செடிபழுத்துக் கண்ணசைத்து வரவேற்கும்
சூரைக் கொடிஆடை பற்றிப் பிடித்திழுக்கும்!
பொங்கும் நினைவெல்லாம் நெஞ்சில் நிறைகிறது
எங்கள் கிராமம் எழிலோடு தெரிகிறது!



காலம் என்னும் மாபெரும் ஆழியின் நடுவே அமைக்கப் பெற்ற கலங்கரை விளக்குகளே புத்தகங்கள் - விப்பின்

# 2011ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி எய்திய அனலைதீவு மாணவச் செல்வங்களின் மனப்பகிர்வுகள்



சத்தியசீலன் கிருத்திகா

நான் யாழ் அனலைதீவு வடலூர். அ.த.க வித்தியாலயத்தில் தரம் 3இற்கு வந்தபிறகு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. கவனம் செலுத்திப் படிக்க ஆரம்பித்தேன். எனது ஆசிரியையும் சிறந்த முறையில் கல்வியைப் புகட்டினார். அவரின் ஊக்கத்தினாலும் அயராத உழைப்பினாலும், எனது பெற்றோரின், அதிபரின் ஊக்கத்தினாலும் பாராட்டுகளினாலும் நான் வகுப்புக்களில் வைக்கும் தினக்குரல், வெற்றித்தேர்வு, போன்ற பல பரீட்சைத்தாள்களில் கூடிய புள்ளிகளை எடுத்து வந்தேன். புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைவேன் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டது. அந்த நம்பிக்கை வீண் போகவில்லை. பரீட்சையில் சித்தியடைந்து 155 புள்ளிகளைப் பெற்று, கல்வி கற்பித்த ஆசிரியைக்கும் எமது அதிபருக்கும், கற்ற பாடசாலைக்கும், பெருமை சேர்த்து பலராலும் பாராட்டப்பட்டேன். நான் எனது பெற்றோர் படும் கஸ்ரத்தை உணர்ந்து ஊக்கத்துடன் படித்து வைத்தியராக வர விரும்புகின்றேன்.



பாக்கியநாதன் றுஷன்

யாழ்ப்பாணத்தின் சப்த தீவுகளில் ஒன்றான அனலைதீவு என்னும் பிரதேசத்தில் உள்ள பாடசாலையான யாழ்/ அனலைதீவு வடலூர் அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலயம். பாடசாலை தரம் 1-5 வரையான வகுப்புகளைக் கொண்டது. கடந்த தரம் 5 புலமைப் பரீட்சையில் நான் 154 புள்ளிகளைப் பெற்று எனது பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளேன்.

எமது அதிபர் திருமதி கௌரி கேதீஸ்வரநாதன் அவர்களின் வழிகாட்டலினாலும் எனது வகுப்பாசிரியர் செல்வி ஆறுமுகம் றஞ்சிதவாணி அவர்கள் வெளியூரில் வசிப்பவராயினும் எனது முன்னேற்றத்திற்கு வகுப்பறைக் கல்வியுடன் விசேட பயிற்சிகளையும் தந்து எனது வெற்றிக்கு பெரிதும் உதவியாக இருந்தார். ஆசிரியர் தரும் பயிற்சிகளை வீட்டில் செய்வதற்கு எனது பெற்றோரின் பங்களிப்பும் உதவியாக இருந்தது. நான் எனது வருங்காலத்தின் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு வேறு உயர்தரப் பாடசாலையை நாடியுள்ளேன். எனது எதிர்பார்ப்புக்களை முன்னெடுத்து செல்வதுடன் எனது வருங்கால குறிக்கோளாக வைத்தியத்துறையை எண்ணியுள்ளேன்.



தே. துவாரகன்
அனலைதீவு தெற்கு
அ.த.க. வித்தி.

2011ம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 168 புள்ளிகளைப் பெற்றுக் கொண்டது. எனக்கு மிக மகிழ்ச்சியாக இருக்கிறது. எனது குடும்பத்தவர்கள் பாடசாலை அதிபர் ஆசிரியர்களும் எனது கிராமத்தவரும் இதனால் சந்தோசமடைந்துள்ளனர். நானும் எனது நண்பர்களும் ஆசிரியரோடு இரவு பகலாக ஒன்றாக இருந்து கற்போம். பல பயிற்சிப் பரீட்சைகளைச் செய்வோம். இவை எல்லாம் என்னால் மறக்கமுடியாத சம்பவங்கள் ஆகும். வீட்டில் எனது தாயாரும் சகோதரிகளும் மிகவும் அன்பாகப் பாடம் சொல்லித் தருவார்கள்.

எமது பரீட்சைக்காக பல்வேறு பயிற்சிப் புத்தகங்களை நூலகத்திலிருந்தும் பெற்று நான் பயிற்சிகளை செய்து பழகினேன். அவை எமக்கு பரீட்சையின் போது மிகவும் உதவியாக இருந்தன நான் மேலும் சிறப்பாக கல்வி கற்று எனது கிராமத்திற்கு பெருமை சேர்க்க விரும்புகிறேன்.

நான் 2011 தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் 167 புள்ளிகளை பெற்றுக் கொண்டது எனக்கு மிக மகிழ்ச்சியாக இருக்கிறது. இதற்காக நானும் எனது வகுப்பு மாணவர்களும் பல்வேறு விடயங்களை கற்றுக் கொண்டோம். தரம் 08ல் கல்வி கற்கும் சகோதரியே வீட்டில் எனக்கு பாடங்களை சொல்லித்தருவார். எமது ஆசிரியர் எம்மோடு எப்போதுமே இருந்து கற்பிப்பார். நான் பரீட்சையில் வெற்றியிடுவதற்காக பல்வேறு பயிற்சி வினாத்தாள்களையும் பயிற்சிப் புத்தகங்களையும் பெற்று முயற்சி செய்தேன். தரம் 03 இலிருந்தே நூலகத்திற்கு சென்று புத்தகங்கள் வாசிப்பேன். இது கட்டுரை எழுத எனக்கு இலகுவாக இருந்தது.



இ. நிதர்சனா அனலைதீவு தெற்கு அ.த.க. வித்தி.

**மாணவர்களே!**

நீங்கள் உங்கள் சுயமுயற்சியால் எழுதும் கதை, கவிதை, கட்டுரைகளை, சித்திரங்களை உங்கள் வகுப்பாசிரியர் அதிபர் சான்றிதழுடன் எமக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம். தரங்கண்டு பிரசுரிப்போம்.

**சிறியோர்கள் செய்த சிறு பிழைகள் பெரியோர்கள் பொறுத்துக் கொள்ளுதல் கடனாகும் - அதிவீரராம பாண்டியர்**



நான் 2011 ஆணடு புலமைப்பரிசில் பரீட்சையில் 157 புள்ளிகளை பெற்றுச் சித்தியடைந்துள்ளேன். இதற்காக எல்லோரும் பாராட்டும் போது நான் மிகவும் சந்தோசப்படுகிறேன். இந்த வெற்றிக்கு எனது அக்கா, தாயார், வகுப்பாசிரியர், அத்தை ஆகியோர் கல்வி கற்பதற்கு உதவி செய்தார்கள். அத்தோடு தரம் 3 இருந்து தரம் 5 வரை நூலகத்திற்கு சென்று புத்தகங்கள் எழுத்துப் பயிற்சிகள் செய்தது கட்டுரை எழுதவும், கணிதம் செய்யவும் எனக்கு இலகுவாக இருந்தது. எமது அயற்பாடசாலை தரம் 5 மாணவர்களுடன் சேர்ந்து கற்ற நாட்களையும் எனது வகுப்பு மாணவர்கள், எமது வகுப்பாசிரியர் ஆகியோருடன் இரவு பகலாக ஒன்றாக கல்வி கற்ற நாட்களையும் என்னால் என்றும் மறக்க முடியாது.

உ.யட்சனன் அனலைதீவு தெற்கு அ.த.க. வித்தி.



நான் 2011 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 155 புள்ளிகளைப் பெற்றுக்கொணடேன். நான் தரம் 5 வரை யா/ அனலைதீவு தெற்கு அ. த. க வித்தியாலயத்தில் கல்வி கற்றேன். புலமைச்சித்தி காரணமாக முதலில் செல்வி மி. தமிழ்ச்செல்வி ஆசிரியரும் அடுத்து யா/ செட்டித்தெரு மெதடிஸ்மிஷன் த. க. பாடசாலை அதிபரும், ஆசிரியரும் இரவு பகலாக எமக்கு கல்வியூட்டி பரீட்சையை இலகுவாக எழுத வழிவகுத்தார்கள். அதுமட்டுமல்லாமல் எமது கிராமத்தில் ஒளிவிட்டு மலர்ந்து கொண்டுள்ள அறிவுக்களஞ்சியமான பொது நூலகத்திற்கும் ஒய்வு நேரங்களில் செல்வேன். அங்கு எமது நூலகர் எங்களை அன்போடு அரவணைத்து கற்றலுக்கு உதவியுள்ளார். இவர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள்.

அத்துடன் நான் சித்தியடைந்தேன் என பாராட்டி பரிசில்களை வழங்கிய பாடசாலைகள், அனலைதீவு ஸ்ரீமனோன்மணி அம்பாள் ஆலயம், தினக்குரல் பத்திரிகை, அனலைதீவு பொதுநூலகம் யாவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ர. நிதர்சன்

**இம் மாணவர்கள் கல்வி இலக்குகளில் வென்றுயர்ந்து தீவின் பெருமைசேர் சான்றோராக விளங்க ஊர்வாவற்றுறை பிரதேசசபையும் "அனலை" சஞ்சிகையும் மனமார வாழ்த்துகின்றன.**

## வாழிய அனலை

அலைமீதுயர் அனலை இனி
அனலைபுகழ் அறைவாள்
நிலையாஞ் சுடர்விழி போல்
நெடுநாளைய நினைவாய்

இம்மா நில நிலைப்பை
இலக்குமதன் துடிப்பை
அம்மா என்ற ஒலிப்பை
அதனூடுள உயிர்ப்பை

மண்பற்றுடன் மறு நாடுறை
மனங்கள் நெருங்கிடவே
என்தாயவள் நலம் யாவையும்
நினைப்பார் மிகவுவப்பாய்

அறிவாலுயர் அரு நூலகம்
அமைவாசக வட்டம்
நிறைவாக்கிய அனலைப் பெண்
நிறைவான் மதி நிகரே.

– பரணி –

## செய்தி அலை

2011யூலை மாதத்தில் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற திரு. மருதையினார் ஜெயகாந்தன் தலைமையில் மக்கள் பிரதிநிதிகள் ஊர்காவற்றுறை பிரதேச சபையில் பொறுப்பேற்றுள்ளார்கள்.

அனலைதீவைச் சேர்ந்த திரு. பரமலிங்கம் அருள்கரன் உப தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். இச் சபையினர் பிரதேச அபிவிருத்தி தொடர்பான பல வேலைத் திட்டங்களைத் துரிதமாக முன்னெடுத்து வருகின்றார்கள்.

படைப்பாளிகளே!

அனலை பல்சுவைப் பெட்டகமாகப் பரிணமிக்க உங்களின் ஒத்துழைப்பையும் ஆக்கங்களையும் அன்புடன் கோருகின்றோம். சமூக உணர்வுடன், கற்றலை ஆழ்ந்து நேசிக்கும் பன்முக வாசிப்பை உவந்திடும் ஒரு இளைய சமூகத்தின் உருவாக்கத்துக்குத் தீனிபோடும் வண்ணம், மண்ணின் பெருமை மணம் வீசும் பல்துறை சார்ந்த ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்.

வெளியீடு:
பொதுசன நூலக வாசகர் வட்டம்
அனலைதீவு பொதுநூலகம்
அனலைதீவு

இப் பரீட்சார்த்த வெளியீடு
நூலகர் செல்வி ச. தர்மிளாவால்
வெளியிடப்பட்டது

**உன்னைக் கண்காணிக்க வேறு யாரும் இல்லாவிட்டால், நீயே உன்னைக் கண்காணித்துக்கொள்ள வேண்டும் - சிங்செள**